17.03.2026

சிறப்பு மாவட்ட நீதிமன்றம் எண் - II, திருச்சிராப்பள்ளி
(மோட்டார் வாகன விபத்து நட்ட ஈடு கோரும் தீர்ப்பாயம்)

**எம்.சி.ஓ.பி. எண். 1067/2022**
**எ.ம.சா. - 1**

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 17ம் நாள் 1969 ம் ஆண்டு 54 விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி உதவியாளர் திரு. எம். கனகலிங்கம் என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுந்தரேசன் | தொழில் | |
| தந்தை/கணவர் பெயர் | | வட்டம் | |
| வயது | | கிராமம் | |

**முதல் விசாரணை (எதிர்மனுதாரர் தரப்பில்) :**

நான் தற்போது கொட்டாம்பட்டி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை சார்வானதன் பேரில் சாட்சியம் அளிக்க ஆஜராகியிருக்கிறேன். சம்மனில் கண்ட குற்ற எண்.26/2015 வழக்கு கோப்பை எடுத்து வந்திருக்கிறேன். வேலாயுதம்பட்டி ராமாயி என்பவர் கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த விபத்தில் ஒரு டிராக்டர், ஒரு டிரைலர், ஒரு டவேரா கார் ஆகியவை சம்மந்தப்பட்டிருக்கிறது. இந்த வழக்கில் டவேரா காரின் டிரைவர் அசோக்குமார் என்பவர் தான் எதிரி என்று சொல்லப்பட்டுள்ளது. மூன்று வாகனங்களும் ஒரே திசையில் பயணித்த வாகனங்களாகும். திருச்சியிலிருந்து மதுரை நோக்கி வடக்கிலிருந்து தெற்கு நோக்கி பயணித்த வாகனங்களாகும். இந்த வழக்கில் மாதிரி வரைபடம் கோப்பில் உள்ளதை தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ.1** ஆகும். இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதியறிக்கையை தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ.2**. ஆகும்.

17.03.2026

இந்த விபத்தில் டவேரா வாகனம் டிரைலரின் பின்பகுதியில் மோதியதாக சொல்லப்பட்டுள்ளது. இந்த விபத்தில் டவேரா காரின் ஓட்டுநர் இறந்து போய் விட்டதால் வழக்கு அற்று போய் விட்டது என்று முடிக்கப்பட்டுள்ளது. காவல்துறை விசாரணையின் அடிப்படையில் விபத்திற்கு காரணம் டவேரா காரின் டிரைவர் தான்.

**<u>கு.வி (மனுதாரர் தரப்பில்)</u>**

இந்த வழக்கின் நான் புலன் விசாரணை அதிகாரி இல்லை என்றும் கோப்பின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். புலன் விசாரணை அதிகாரியை விசாரித்தால் தான் இந்த வழக்கின் உண்மை விவரம் தெரியவரும் என்றால் சரிதான். இந்த வழக்கில் சாட்சிகள் ராமாயி, பிச்சம்மாள், மோகன், கொடியரசி, செல்வம், பூமிநாதன், ராமசாமி, சரவணன், ரமேஷ், அன்பழகன், சேவுகபெருமாள் ஆகியோர் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். சாட்சி ராமாயி வேலை பார்த்து விட்டு டிராக்டரில் பயணம் செய்ததாக சொல்லப்பட்டுள்ளது. மற்ற சாட்சிகளும் வேலை செய்து விட்டு திரும்பி வரும் போது தான் விபத்து என்று சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சாட்சியம் அளித்ததை தட்டெழுத்தருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டெழுத்தரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு, அவரது கையொப்பம் பெறப்பட்டது.

சிறப்பு மாவட்ட நீதிபதி எண்.II,
திருச்சிராப்பள்ளி.